[6th August 1966

கனம் திரு. வெ. ராமையா : முன்பிருந்த நிலை எனக்குத் தெரியாது. இப்போது உடனடியாக அவர்களுக்கு 30 ரூபாயும், துணி வாங்கிக்கொள்ள 10 ரூபாயும் கொடுக்கிறோம், உதவியாக. அதோடு இல்லாமல், அவர்கள் வீடு கட்டிக்கொள்ள அல்லது குடிசை போட்டுக்கொள்ள 1,000 ரூபாய் வரையில் கடன் கொடுக்க இப்போது திட்டமுண்டு.

Sub-way opposite Central Station

* 161 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) when the proposed sub-way opposite Central Station across Poonamalle High Road is to be taken up for execution; and

(*b*) the details and nature of the construction proposed?

THE HON. SRI V. RAMAIAH : Attention is invited to the paper [a] placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : ரௌண்ட் டாணவில் கட்டப்பட்டு வருகிற சப்வேயில் கார்ப்பரேஷன் பைப் லைன்களை மாற்றியமைக்காததால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது.

கனம் சபாநாயகர் : இது சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில் உள்ளதைப் பற்றியது. நீங்கள் ரௌண்ட் டாணவிற்குப் போனால் அமைச்சர் எப்படி பதிலளிக்க முடியும்?

பொன்மலை அருகிலுள்ள புறச்சாலை

* 162 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள காவிரிப் பாலத்தின் இருபுறமும் பொன்மலை ரயில்வே ஓவர் பிரிட்ஜிலிருந்து கொள்ளிடம் பாலம்வரை (by pass) புறச்சாலைக்குத் தார் போடப்பட்டதா?

(இ) ஆமெனில் எத்தனை முறை போடப்பட்டது?

(உ) ஒவ்வொரு முறையும் ஆன செலவு எவ்வளவு?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) & (*c*) The by pass roads were black topped once in 1963 and an expenditure of Rs. 1,29,842 was incurred on the work.

திரு. து. ப. அழகமுத்து : இந்த பை பாஸ் ரோட்ஸுக்கு இரண்டு தடவை தார் போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஒருமுறைதான் தார் போடப்பட்டதாகக் கூறுகிறார்கள். இதில் எது உண்மை?

---

[a] Printed as Appendix III on page 132.

6th August 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : 1963-ல் தார் போட்டு அதை முதல் தடவையாகப் பூர்த்தி செய்தார்கள். பிறகு மெயின்டினன்ஸ் காக ஏதாவது செய்திருப்பார்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், இந்தச் சாலையில், எத்தனை 9-00 a.m.
தரம் தார் போட்டும் பயனில்லை. சீக்கிரமாக மறுபடியும் மோச மடைந்து விடுகிறது. இந்த ரோடில் சைக்கிள்களிலோ அலலது கார்களிலோ போவதற்குச் சாத்தியமில்லாமல் நகரத்திற்குள் நுழைந்துதான் போகவேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்தப் பக்கத்தில் போயிருக்கும்போது அதைப் பார்த்திருப் பார்கள். ஆகவே, இதை நல்ல முறையில் பழுது பார்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : திருச்சிக்குப் போகும்போது நானும் பார்த்திருக்கிறேன். அந்தப் பக்கம் நிறைய நீர் நிற்கக் கூடிய இடமாக இருப்பதால், சீக்கிரம் பழுதடைந்துவிடுகிறது. இப்போது நல்ல முறையில் மெயின்டெய்ன் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது போய்ப் பார்த்தால் முன்பு இருந்தது போல் அல்லாமல் நல்லமுறையில் பழுதுபார்த்திருப்பதைப் பார்க்கலாம்.

Widening of bridges near Basin Bridge

* 163 *Q.*—SRI A. RAGHAVA REDDI : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is a proposal to widen the three narrow bridges near the Basin Bridge; and

(*b*) if so, when it will be implemented?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) Government have accorded adminstrative sanction for the three works. The works will be taken up for execution as soon as tenders are finalised by the Chief Engineer (Highways and Rural Works).

Prohibition of movement of paddy

* 164 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have prohibited the movement of paddy even from place to place within a taluk especially in Thirupathur taluk, Ramanathapuram district; and

(*b*) if so, whether the Government have provided marketing facilities for the agriculturists to sell their paddy?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) Does not arise. Apart from this, the Government have provided marketing facilities for the agriculturists to sell their paddy because Government are prepared to purchase whatever paddy is offered at maximum price.